14 05 2024 **TUESDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் 7-ஆவது கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று மாலை முடிவடைந்தது.

2. கோவிட் பெருந்தொற்றின்போது ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்க பிஜேபி உறுதியான நடவடிக்கைகளை எடுத்ததாக அக்கட்சியின் தலைவர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

3. சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பை மாற்றியமைக்க காங்கிரஸ் முயற்சி மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

4. காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் வரும் 21-ஆம் தேதி தில்லியில் நடைபெறவுள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>>

மக்களவை 7ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும். மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் வெள்ளிக்கிழமை கடைசி நாளாகும்.

7வது மற்றும் இறுதிக்கட்டமாக, 7 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 57 தொகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாபில் தலா 13 தொகுதிகளுக்கும், மேற்கு வங்கத்தில் 9 தொகுதிகளுக்கும், பீகாரில் 8 தொகுதிகளுக்கும், ஒடிசாவில் 6 தொகுதிகளுக்கும், ஹிமாச்சலப்பிரதேசத்தில் 4 தொகுதிகளுக்கும், ஜார்க்கண்டில் 3 தொகுதிகளுக்கும், சண்டிகரில் ஒரு தொகுதிக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதனிடையே எஞ்சியுள்ள மக்களவைத் தொகுதிகளில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, அமேதி தொகுதியில் வாக்கு சேகரித்தார்.

கோவிட் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட இந்திய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை பிஜேபி-யும், அதன் கூட்டணி கட்சிகளும் மேற்கொண்டதாக கூறினார்.

அனைவருக்கும் உணவுப்பொருள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத்தும், அமேதி தொகுதியில் வாக்கு சேகரித்தார்.

இதனிடையே, காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, அமேதி தொகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தியுடன் இணைந்து ஜான்சி தொகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, சௌரி சவ்ரா என்ற இடத்தில் பொதுமக்களிடையே உரையாற்றினார்.

தங்களது கட்சி சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பை மாற்ற நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக, அளிக்கப்பட்ட 90 சதவீதம் புகார்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பெரிய அளவிலான 425 புகார்கள் அளிக்கப்பட்டதாகவும், அதில் 400 புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வுகாணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகளை மீறிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கு தனித்தனியாக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 30வது கூட்டம் அதன் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் தலைமையில் வரும் 21-ஆம் தேதி தில்லியில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30ஆம் தேதி காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் மே மாதத்தில், 2 புள்ளி ஐந்து டிஎம்சி காவிரிநீரை திறந்து விட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு பரிந்துரை செய்தது.

இதற்கிடையே, நாளை மறுநாள் காவிரிநீர் ஒருங்காற்றுக்குழுக் கூட்டம் தில்லியில் மீண்டும் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

இணையதள மோசடிகளிலிருந்து தற்காத்துக்கொள்ள பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேசிய இணையதள குற்றங்கள் தடுப்பு பிரிவின் தகவல் தளம் வாயிலாக மோசடி பேர்வழிகள் குறித்து ஏராளமான புகார்கள் வருவதாக தெரிவித்துள்ளது.

காவல்துறை மற்றும் சிபிஐ, போதைப்பொருள் தடுப்புப்பிரிவினர், இந்திய ரிசர்வ் வங்கி, அமலாக்கப்பிரிவு போன்ற அமைப்புகளின் பெயர்களை பயன்படுத்தி, இணையதளம் வாயிலாக பல்வேறு மோசடிகள் நடைபெறுவதாக புகார்கள் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அதிகாரிகளைபோல, இணைய குற்றவாளிகள் செயல்படுவதாகவும், பொதுமக்களை மிரட்டுதல், பணம் பறித்தல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவது குறித்தும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றவாளிகளிடம் பலர் தங்களது பணத்தை இழந்திருப்பதாகவும், எல்லை கடந்தும் இந்த குற்றங்கள் நிகழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று பாதிப்புக்கு உள்ளானோர் உடனடியாக தகவல் தெரிவித்தால், உள்துறை அமைச்சகம் விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, 1 9 3 0 என்ற அவசர உதவி தொலைபேசி எண்ணை பயன்படுத்தலாம் என்றும், **cybercrime.gov.in** என்ற இணையதளத்தையும் பொதுமக்கள் பயன்படுத்தலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

எல் டி டி ஈ அமைப்பை மேலும் ஐந்தாண்டுகளுக்கு சட்டவிரோத அமைப்பாக தடை செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியாவின் இறையாண்மைக்கும், எல்லை பாதுகாப்பிற்கும் இந்த அமைப்பின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலாக இருக்கும் என கருதி இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல் டி டி இ-யின் பிரிவினைவாதம் மற்றும் அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகள் இந்திய மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என கருதி, தடை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

பிளஸ்-1 பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

91 புள்ளி ஒன்று ஏழு சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

241 அரசுப் பள்ளிகள் நூறு சதவீத தேர்ச்சி பெற்றுள்ளன.

96 புள்ளி பூஜ்யம் இரண்டு சதவீத தேர்ச்சியுடன் கோவை மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது.

ஈரோடு மாவட்டம் இரண்டாவது இடத்தையும், திருப்பூர் மாவட்டம் மூன்றாவது இடத்தையும் பிடித்தது.

81 புள்ளி நான்கு சதவீத தேர்ச்சியுடன் வேலூர் மாவட்டம் கடைசி இடத்தில் உள்ளது.

<<<<<<>>>>>>

**CUET** எனப்படும் பல்கலைக் கழக நுழைவுத்தேர்வு, நாளை தொடங்கி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்த தேர்வுகள் நாட்டில் 379 நகரங்களிலும், வெளிநாடுகளில் 26 இடங்களிலும் நடைபெறுகிறது.

இந்த தேர்வில் பங்கேற்கும் மாணவர்களுக்கான அனுமதிச் சீட்டுகள், தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இம்மையத்தின் இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் எமது செய்தியாளரிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தூத்துக்குடியில் தொடர் மழை காரணமாக, உப்பளத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<<<>>>>>>

கொடைக்கானலில் வரும் 17-ஆம் தேதி முதல், 26-ஆம் தேதிவரை கோடை விழா பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

17-ஆம் தேதி மலர் கண்காட்சி ப்ரையன்ட் பூங்காவில் தொடங்குவதாகவும், அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தோட்டக்கலை அலுவலர் திரு சிவபாலன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மோட்டார் வாகனங்கள் தானாக தீ பற்றி எரிவதை தவிர்க்க வாகனங்களில் மாற்றங்கள் செய்யப்படும் போது அங்கீகரிக்கப்படாத **CNG** அல்லது **LPG**-ஐ பயன்படுத்தக்கூடாது என்று போக்குவரத்து ஆணையர் அறிவுறுத்தியுள்ளார்.

-----------------------

திருச்சி மாவட்டத்தில் பள்ளி வாகனங்கள் சிறப்பு ஆய்வு முகாம் மாவட்ட ஆட்சியர் திரு பிரதீப்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

------------

ரோமில் நடைபெறும் இத்தாலி ஓப்பன் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை தோல்வியடைந்தது.

<<<<<<END>>>>>>